# நாரம்மல பிரதேச சபை

# குருநாகல் மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நாரம்மல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கமநல சேவை திணைக்களத்தில் இருந்து சபைக்கு கிடைத்திருந்த ரூபா 1,946,897 தொகை பெறுமதியான 2 வாகனங்கள் மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிகள் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 900,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் வருட இறுதியில் கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு மீதி ஆகிய ரூபா 61,498 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வண்டு தொடர்பாக மூலதனச் செலவுகள் ரூபா 36,652,361 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 30,595,472 தொகை என ரூபா 6,056,889 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆண்டின் போது இலக்கம் 53 – 5721 கொண்ட கப் வண்டியின் திருத்த வேலைக்காக உள்ளுராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 1,444,500 இனை ஆண்டிற்கான மூலதன வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) அலவ்வ பிரதேச சபையில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 499,812 இற்கான தொகை 68 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் முற்பணக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதும் மீண்டும் ஒரு முறை அதே கணக்கிற்கு அதே பெறுமதியை வரவு வைக்கப்பட்டிருந்தமையால் வருட இறுதியில் முற்பணக் கணக்கு மீதி ரூபா 499,812 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்கள் மீதி ஆகிய ரூபா 26,090,358 இல் மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்ட ரூபா 15,000 பெறுமதியான மின்சார களஞ்சியக் கட்டடம் மற்றும் ரூபா 312,427 இற்கான பொதுச் சந்தை மற்றும் பஸ் தரிப்பிடக் கட்டடங்களின் பெறுமதியும் அடங்கியிருந்தன.

(எ) முன்னைய ஆண்டு தொடர்பாக கடன் கொடுத்தோர்கள் என ஏற்பாடு செய்யப்படாத ரூபா 85,250 தொகை மீளாய்வாண்டின் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது நாட் குறிப்பு இலக்கம் 59-1 இன் மூலம் மூலதன செலவுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு கடன் கொடுத்தோர் கணக்கு செலவு வைக்கட்டிருந்தமையால் மூலதன செலவு மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா 85,250 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) வருட ஆரம்பத்தில் காணப்பட்ட வைப்புக் கணக்கின் மீதிகள் வைப்பு பதிவேட்டில் காணப்பட்ட நேரொத்த மீதியுடன் சீராக்கல் மேற்கொள்வதற்காக நாட்குறிப்பு இலக்கங்கள் 62,63,64,65 மற்றும் 66 மூலம் ரூபா 1,146,310 தொகை ஒன்று திரண்ட நிதியத்திற்கு வரவு வைத்து வைப்புக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் நாட்குறிப்பு இலக்கம் 67 இன் மூலம் ரூபா 51,815 தொகை ஒன்று திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு வைப்புக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதியின் கீழ் 6 கணக்கு விடயங்களில் கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளின் பிரகாரம் நேரொத்த பெறுமதிகளிடையே ரூபா 1,486,201 இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 27,921,373 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 6,061,762 தொகை 1 முதல் 3 வருடம் வரையான காலப்பகுதியை சேர்ந்தவையாகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 18,945,895 ஆகும்.

1.3.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 11,381,418 பெறுமதியான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதி முறைப்படி இனங்காணப்படாமல் 55 இலக்க நாட்குறிப்பின் மூலம் திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

2 நிதிச் செயலாற்றுகை

--------------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 2,293,799 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 12,181,622 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 9,887,823 இற்கான வீழ்ச்சி காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 24,932,729 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 32,945,587 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 5,719,059 இற்கான பற்றாக்குறை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

--------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 56,483,260 இல் நூற்றிற்கு 54 ஆகிய ரூபா 30,595,170 உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம் முத்திரை கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 24,932,729 இன் நூற்றிற்கு 84 என ரூபா 21,041,549 தொகை ஒன்று கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தின் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைத்த பணத்தினை அடக்குகின்றது.

(ஆ) சபையின் மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 54,189,460 இன் நூற்றிற்கு 58 ஆகிய ரூபா 31,432,744 தொகையொன்று தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் அவற்றில் ரூபா 18,392,388 எனப்படும் நூற்றிற்கு 59 ஆகிய சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்திருந்தது. மூலதனச் செலவாகிய ரூபா 32,945,587 இன் நூற்றிற்கு 18 எனப்படும் ரூபா 6,164,889 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் மீதியான நூற்றிற்கு 82 ஆகிய ரூபா 26,780,698 தொகை ஏனைய நிறுவனங்களின் ஏற்பாடுகளில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த அபிவிருத்தி விடயங்களாகும்.

2.3 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 2011 ஆண்டு முதல் தீர்க்கப்படாமல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 113,625 பெறுமதியினை மீளாய்வாண்டிலும் தீர்த்திருக்கவில்லை.

2.4 வருமான நிருவாகம்

--------------------------------

2.4.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

-------------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வர்த்தக வரி, கடை வாடகை, குத்தகை ஆகிய வருமான வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகள் விதித்தில்லாத போதிலும் சபையின் வருமானத்தை சேகரிப்பாளர்களினால் ஆண்டு பூராகவும் வீதவரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரம் போன்ற வருமானங்கள் வெளிக் களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

2.4.2 வர்த்தக வரி மற்றும வியாபார அனுமதிப்பத்திர கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 150(1) மற்றும் 152(1) மற்றும் 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் 59 முதல் 67 வரையான விதிகளின் பிரகாரம் கணப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு 7 நாட்களில் விதிக்கப்படும் வரியை செலுத்தும்படி அறிவிக்க வேண்டும் எனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

2.4.3 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 805,784 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

-----------------------------------------------

சபையினால் 2011 முதல் 2013 ஆண்டு வரையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டட விண்ணப்பங்கள் 226 இல் மீளாய்வாண்டு இறுதி வரை இணக்கச் சான்றிதழ் பெற்றிருக்காத 194 இடங்கள் காணப்பட்டன. அக் கட்டடங்கள் அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டிருந்தால் சபையின் துணை விதியின் பிரகாரம் ரூபா 38,800 இற்கான வருமானம் ஒன்று சபைக்கு உழைக்க கூடியதாக காணப்பட்டது. அத்துடன் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்படாவிடின் அனுமதிப்பத்திரத்தின் வருடாந்தம் நீடிப்புக் கட்டணத்தை அறவீடு செய்வதற்காக சபைக்கு முடியுமாக இருந்தது.

3.2 செயற்திட்டங்கள் அமுல் நடத்துதல்

----------------------------------------------------------

2011 ஆண்டின் போது ரூபா 277,500 செலவிடப்பட்டு கொள்வனசு செய்யப்பட்ட இரண்டு கொங்கிரீட் அச்சுக் கற்கள் இயந்திரங்களின் மூலம் 2011 அக்டோபர் மாதத்தின் பின்னர்

கொங்கிரீட் அச்சுக் கற்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மீண்டும் 2011 திசெம்பர் மாதத்தின் ரூபா 135,000 செலவிடப்பட்டு குறிப்பிட்ட வளவில் இரண்டு அச்சுக் கற்கள் இயந்திரங்கள் பொறுத்தப்பட்டிருந்த போதும் 2012 பெப்ரவரி மாதத்தின் பின்னர் அச்சு கற்கள் உற்பத்தியும் நடைபெற்றிருக்கவில்லை.

## 4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

------------------------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் ரூபா 115,500,000 மூலதன இலாபம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் நூற்றில் 22 ஆகிய ரூபா 24,932,729 தொகை மாத்திரமே நெருங்கக் கூடியதாக இருந்தது.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்